| தரம் :- 13 (2016) | நாடகமும் அரங்கியலும் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

❖ 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

01) அன்ரிகனி நாடகத்தில் வரும் ஈடிப்பஸின் இரு ஆண் பிள்ளைகள்
(1) அன்ரிகனி, இசுமெனி (2) யூரிடிஸ், பொலினிசெஸ்
(3) ஈற்றோக்லிஸ், பொலினிசெஸ் (4) கிறயோன், ஏமன்
(5) தைரீசியஸ், ஈற்றோக்லிஸ் (.......)

02) காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தின் மூலக்கதை பெறப்பட்டது.
(1) கந்தபுராணத்தில் இருந்து
(2) சிவபுராணத்தில் இருந்து
(3) இராமாயணத்தில் இருந்து
(4) மகாபுராணத்தில் இருந்து (.......)
(5) மகாபாரதத்தில் இருந்து

03) ஒதெல்லோ நாடகத்தில் காணப்படாத அம்சம்
(1) காதல், நம்பிக்கை (2) உன்னதகாமம், துரோகம்
(3) பொறுமை, தூய அன்பு (4) வருவதுரைத்தல், ஊழ்வினை (.......)
(5) சந்தேகம், சதித்திட்டம்

04) அன்ரிகனி நாடகத்தின் பிரதான மோதுகை
(1) அரச நீதிக்கும் - தெய்வ நீதிக்கும் இடையிலான போராட்டம்
(2) அதிகாரப் போராட்டம்
(3) ஆணாதிக்க சிந்தனை
(4) தந்தையை கொன்று தாயைத் திருமணம் முடித்தல் (.......)
(5) சந்தேக புத்தி

05) ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் முதன்மையாகக் கொண்ட மூலகம்
(1) இசை (2) சொற்கள் (3) வேடப்புனைவு (.......)
(4) ஒப்பனை (5) மேடை ஒளி

06) ஒரு பாவையின் வீடு நாடகத்தில் வரும் ஹெல்மரின் பாத்திரப் பண்பாகக் கருத முடியாதது
(1) பாரம்பரியத்திற்கு அடிமைப்பட்டவன்
(2) பரந்த மனப்பாங்கானவன்
(3) புரிந்துணர்வு இல்லாதவன்
(4) ஆணாதிக்க சிந்தனையுடையவன் (.......)
(5) பாரம்பரியமான சமூக, பண்பாடு, பொருளாதார அமைப்பில் மூழ்கிப் போனவன்

07) மகாகவியின் கோடை, ம. சண்முகலிங்கத்தின் கூடி விளையாடு பாப்பா போன்ற நாடகங்களை முதலில் நெறியாள்கை செய்தவர்
(1) நா. சுந்தரலிங்கம் (2) இ. சிவானந்தன் (3) அ. தாசீசியஸ் (.......)
(4) சி. மௌனகுரு (5) சுஹைர்ஹமீட்



agaram.lk
Scanned with CamScanner

08) கேரளா பிரதேசத்திற்குரிய ஆற்றுகை வடிவம்
(1) தெருக்கூத்து (2) கதக் (3) மணிப்புரி
(4) குச்குப்புடி (5) கதகளி (.......)

09) நாடக வழக்கு, உலகியல் வழக்கு பற்றிக் கூறும் நூல்
(1) சிலப்பதிகாரம் (2) கலித்தொகை (3) தொல்காப்பியம்
(4) நாட்டியசாஸ்திரம் (5) திருக்குறள் (.......)

10) பின்வருவனவற்றுள் கோபால கிருஸ்ண பாரதியாரால் எழுதப்பட்ட கீர்த்தனை
(1) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (2) பத்மாவதி சரித்திரம்
(3) கோவலன் சரித்திரம் (4) பஞ்சபாண்டவர் சரித்திரம்
(5) இராம நாடகக் கீர்த்தனை (.......)

11) வங்கக் கவி ரவீந்திரநாத் தாகூரின் துறவி நாடகத்தை மையமாகக் கொண்டு குழந்தை ம. சண்முகலிங்கத்தால் எழுதப்பட்ட நடன நாடகம்
(1) ஆர்கொலோ சதுரர் (2) அளப்பருங் கருணை
(3) காண்டவ தகனம் (4) கந்தன் கருணை
(5) மண்சுமந்த மேனியர் (.......)

12) பராக்கிரம நிரியெல்லவினால் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட அரங்க நிறுவனம்
(1) விபுலரங்க சபா (2) அபிநா (3) ஜனகரளிய
(4) சிங்கள நாடக சபா (5) அபே கட்டிய (.......)

13) ஒதெல்லோ நாடகத்தில் வரும் டெஸ்திமோனாவின் தந்தை
(1) லோடோவிக் (2) இயோகோ (3) மைக்கல் கசியோ
(4) றொட்ரிகோ (5) பிரபான்ஷியோ (.......)

14) யூலியஸ் சீசர் நாடக கதையின் சீசர் பாத்திரம் எந்நகரைச் சேர்ந்தவன்?
(1) கிரேக்க தீபிஸ் (2) இத்தாலிய ரோம்
(3) இங்கிலாந்தின் தெற்கு வேல்ஸ் (4) ரஷ்யாவின் மொஸ்கோ
(5) எகிப்தின் கெப்ரோ (.......)

agaram.lk

15) இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் என்ற நூலின் ஆசிரியர்
(1) இ. சிவானந்தன் (2) சொக்கன்
(3) கா. சிவத்தம்பி (4) இ. முருகையன்
(5) காரை சுந்தரம்பிள்ளை (.......)

16) ஒரு பாவையின் வீடு நாடகத்தில் இடம்பெறாத பாத்திரம்
(1) ஹெல்மர் (2) குறொக்ஸ்ரட் (3) கிறிஸ்ரினா
(4) லோறா (5) டொக்டர் ராங் (.......)

17) பேராசிரியர் வித்தியானந்தனால் தயாரிக்கப்படாத கூத்து
(1) கர்ணன்போர் (2) வாலிவதை (3) நொண்டி
(4) இராவணேசன் (5) அலங்காரரூபன் (.......)

18) கலைமுகம் ஆற்றுகை எனும் சஞ்சிகைகளை வெளியிடும் நிறுவனம்
(1) திருமறைக் கலாமன்றம்
(2) நாடக அரங்கக் கல்லூரி
(3) நடிகர் ஒன்றியம்
(4) அரங்க செயற்பாட்டுக்குழு
(5) அவைக்காற்றுக் கலைக்கழகம் (.......)

19) C.N அண்ணாத்துரையால் எழுதப்பட்ட நாடகம்
(1) தூக்குமேடை (2) வேலைக்காரி (3) நச்சுக்கோப்பை
(4) ரத்தக் கண்ணீர் (5) துரோகிகள் (.......)



Scanned with CamScanner

20) நடிகர் ஒன்றியத்தில் இணைந்திருந்த அரங்க நிறுவனங்கள்
(1) அவைக்காற்றுக் கலைக்கழகம், அம்பலத்தாடிகள் குழு
(2) திருமறைக்கலாமன்றம், மட்டக்களப்பு நாடகசபை
(3) எங்கள் குழு, கூத்தாடிகள் குழு
(4) நாடக அரங்கக் கல்லூரி, எங்கள் குழு
(5) அரங்க செயற்பாட்டுக்குழு, செயற்திறன் அரங்க இயக்கம் (.......)

21) அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையை அடிப்படையாகக் கொண்டு குழந்தை ம. சண்முகலிங்கத்தால் எழுதப்பட்ட இசை நாடகம்
(1) அரிச்சந்திரா (2) அளப்பருங் கருணை (3) கண்டன் சீதையை
(4) காண்டவ தகனம் (5) பவளக்கொடி (.......)

22) பின்வருவனவற்றுள் கூத்துமுறையில் அமைந்த நாடகம்
(1) கோடை (2) உறவுகள் (3) சங்காரம்
(4) விளக்கும் விரல்களும் (5) கண்டன் சீதையை (.......)

23) கதாகாலேட்சேப வடிவத்தினூடாக அறிமுகமான கீர்த்தனை நாடகங்கள் தோற்றம் பெற்ற பிரதேசம்
(1) ஆந்திரா (2) குஜராத் (3) தெலுங்குதேசம்
(4) உத்தரப் பிரதேசம் (5) மகாராஷ்டிரா (.......)

24) பின்வருவனவற்றுள் அபத்த நாடகமாக கருதப்படுவது
(1) கடூழியம் (2) சங்காரம் (3) அபசுரம்
(4) ஒருபாவை வீடு (5) உடையார் மிடுக்கு (.......)

25) பேராசிரியர் சி. மௌனகுருவால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரங்க நிறுவனம்
(1) நாடக அரங்கக் கல்லூரி (2) நடிகர் ஒன்றியம்
(3) நாடகசபா (4) அரங்க ஆய்வு கூடம்
(5) அரங்கக் கூடம் (.......)

26) அண்மையில் காலமான இலங்கை சிங்கள சிறுவர் நாடக ஆசிரியர்
(1) பராக்கிரம திரிஜெல்ல (2) தர்மசிறி பண்டாரநாயக்க
(3) சுகத பால டி சில்வா (4) ஜோண் டி சில்வா
(5) சோமலதா சுபசிங்க (.......)

agaram.lk

27) வானொலி நாடகத்தின் மேடையாக அமைவது
(1) ஒலிப்பதிவு செய்யுமிடம்
(2) காற்றுவெளி
(3) நடிப்போரின் மனம்
(4) கேட்போரின் மனம்
(5) நடிகர்கள் நின்று நடிக்கும் இடம் (.......)

28) நாடகத்திற்கான விளம்பரம், நுழைவுச் சீட்டுக்களுக்குப் பொறுப்பானவர்
(1) நாடகாசிரியர் (2) தயாரிப்பாளர் (3) நடிகர்
(4) நெறியாளர் (5) மேடை முகாமையாளர் (.......)

29) நடிகர் பிரதானமாகக் கொண்டிருக்க வேண்டிய திறன்
(1) பாடும் திறன்
(2) ஆடும் திறன்
(3) அழகான உடல்
(4) சபைக்கூச்சமற்ற மனோபாவம்
(5) உள்ளார்ந்த நடிப்பாற்றல் (.......)

30) மேடை நாடகத்தில் காட்சிகளைத் தெளிவாகப் புலப்படுத்த பயன்படுத்தும் ஒளி வகை
(1) பெருக்கொளி (2) கீற்றொளி (3) அடியொளி
(4) பொட்டொளி (5) வர்ணச்சில்லு (.......)



Scanned with CamScanner

31) ஒரு கட்சியில் ஒரு நடிகர் உரையாடுகின்றபோது மற்றைய நடிகர்
(1) குறுக்கே பேசாது இருத்தல் வேண்டும்.
(2) நினைவூட்டுனரைக் கவனிக்க வேண்டும்.
(3) பார்வையாளரை அவதானிக்க வேண்டும்.
(4) நெறியாளரை அவதானிக்க வேண்டும்.
(5) வேண்டிய பதிற்குறிகளைக் காட்ட வேண்டும். (.......)

32) தொலைக்காட்சி நாடகத்தின் வெற்றி
(1) காட்சியில் தங்கியுள்ளது.
(2) அதன் வழிவரும் குரலில் தங்கியுள்ளது.
(3) காட்சியையும் குரலையும் இணைப்பதில் தங்கியுள்ளது.
(4) வெளிப்புறக் காட்சிகளில் தங்கியுள்ளது.
(5) ஒலிப்பதிவில் தங்கியுள்ளது. (.......)

33) நடிகர் நீண்ட வசனம் பேசுவதற்குக் காற்றை சேமித்து வைக்க உதவும் பகுதி
(1) உச்சந்தலை (2) அடிவயிறு (3) நெஞ்சு
(4) தொண்டை (5) நாசி (.......)

34) நாடகத்திற்கான இசையின் இயல்புகளுள் ஒன்று
(1) பொருத்தமான இடங்களில் பாடல்களை வழங்குதல்
(2) நாடகத்தினூடே மேலோங்கும் உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுத்தல்
(3) பாடல்கள் இல்லாது வாத்தியங்களினூடாக மட்டும் வழங்கப்படுதல்
(4) பார்ப்போருக்குப் பழமையானதாக இருத்தல்
(5) கதையோட்டத்திற்குப் பின்னணியாக மட்டும் அமைதல் (.......)

35) சீசர் நாடகத்தில் சீசருக்குரிய கரிநாளாக கூறப்பட்டது
(1) மார்ச் 18 (2) மார்ச் 17 (3) மார்ச் 16
(4) மார்ச் 15 (5) மார்ச் 14 (.......)

36) ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டாவது
(1) கோழிகோட்டான் (2) ஆடும் வீடும் (3) குருட்டு ஆட்டோ
(4) பொன்முட்டை (5) பஸ்

agaram.lk

37) அபசுரம் நாடகத்தில் இடம்பெறாத பாத்திரம்
(1) அருளர் (2) திருவர் (3) சிவாயர்
(4) பொதுவர் (5) தியாகர் (.......)

38) மேடை முகாமையாளரின் பணிகளில் ஒன்று
(1) ஒலி, ஒளி விதானிப்பு (2) ஒப்பனை செய்தல்
(3) காட்சிகளை ஒழுங்குபடுத்தல் (4) வேட உடை விதானிப்பு
(5) இசையமைப்பு (.......)

39) படம் சித்தரிக்கும் காட்சி இடம்பெற்ற யதார்த்த நாடகம்
(1) ஒரு பாவையின் வீடு
(2) அபசுரம்
(3) ஒதெல்லோ
(4) அன்ரிகனி
(5) சாகுந்தலம் (.......)



40) படத்திலுள்ள அரங்கவியலாளர்
(1) மகாகவி உருத்திரமூர்த்தி
(2) இ. முருகையன்
(3) சி. மௌனகுரு
(4) இ. சிவானந்தன்
(5) நா. சுந்தரலிங்கம் (.......)



(40 × 1 = 40 புள்ளிகள்)



Scanned with CamScanner

பகுதி - II

❖ பகுதி - II இல் பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

பிரிவு - A

01) (i) ஒதெல்லோ நாடகத்தின் ஆசிரியர் யார்? (1 புள்ளி)
(ii) ஒதெல்லோ நாடகத்தின் கரு யாது? (2 புள்ளி)
(iii) ஒதெல்லோ நாடக பாத்திரங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளையும் குறிப்பிடுக. (4 புள்ளி)
(iv) ஒதெல்லோ நாடகத்தினூடாக என்றென்றும் பொருந்தி நிற்கும் மனித இயல்புகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக. (8 புள்ளி)

02) (i) யதார்த்தவாதம் என்றால் என்ன என்பதை விளக்குக. (3 புள்ளி)
(ii) இப்சனின் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தை யதார்த்த நாடகமாகக் கொள்வதற்கான காரணங்களை முன்வைத்து விளக்குக. (6 புள்ளி)
(iii) ஒரு பாவை வீடு நாடகத்தில் குறியீடுகள் மூலம் வாழ்க்கையின் யதார்த்தம் வெளிப்படும் விதத்தை விளக்குக. (6 புள்ளி)

03) (i) காளிதாசரின் அபிக்ஞான சாகுந்தலத்தில் இடம்பெறும் பிரதான பாத்திரங்கள் மூன்று தருக. (3 புள்ளி)
(ii) அவை ஒவ்வொரு பாத்திரங்களினதும் இயல்புகளைக் கூறி விளக்குக. (6 புள்ளி)
(iii) சமஸ்கிருத நாடகங்களின் பொதுவான பண்புகளுடன் இந்நாடகம் ஒத்துப்போவதை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளி)

பிரிவு - B

04) (i) இலங்கைத் தமிழ் அரங்கில் பாரம்பரியமாகக் கூத்து பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிட்டு, அப்பிரதேச கூத்துக்களைப் பெயரிடுக. (5 புள்ளி)
(ii) அவற்றுள் எவையேனும் இரண்டு கூத்துக்கள் பற்றி விளக்குக. (5 புள்ளி)
(iii) கூத்தின் பிரதான பண்புகளைக் கூறி விளக்குக. (5 புள்ளி)

05) இலங்கைத் தமிழ் அரங்கில் பின்வரும் அரங்க நிறுவனங்களின் பங்களிப்புக்கள் பற்றி விளக்குக.
(i) நடிகர் ஒன்றியம்
(ii) நாடக அரங்கக் கல்லூரி
(iii) அவைக்காற்றுக் கலைக்கழகம்
(3 × 5 = 15 புள்ளி)

06) சிங்கள அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் பின்வரும் அரங்க வடிவங்கள் பற்றிக் குறிப்புகள் வரைக.
(i) கோலம
(ii) நாடகம
(iii) நூர்த்தி
(iv) பாஸ்க்கா
(v) சன்னியகும
(3 × 5 = 15 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

FWC

| நாடகமும் அரங்கியலும் – I | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 4 | 11) | 1 | 21) | 4 | 31) | 3 |
| 02) | 5 | 12) | 4 | 22) | 5 | 32) | 5 |
| 03) | 3 | 13) | 3 | 23) | 3 | 33) | 4 |
| 04) | 2 | 14) | 1 | 24) | 1 | 34) | 2 |
| 05) | 1 | 15) | 2 | 25) | 5 | 35) | 4 |
| 06) | 3 | 16) | 1 | 26) | 2 | 36) | 3 |
| 07) | 2 | 17) | 3 | 27) | 2 | 37) | 4 |
| 08) | 3 | 18) | 5 | 28) | 3 | 38) | 1 |
| 09) | 2 | 19) | 2 | 29) | 1 | 39) | 3 |
| 10) | 3 | 20) | 4 | 30) | 4 | 40) | 2 |

(40 × 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II
### பிரிவு - A

01) (i) குறித்த இடத்தில் குறித்த குழுவினர் முன்னிலையில் ஒருவரால் அன்றேல் பலரால் குறித்த காலத்தில் நிகழ்த்திக் காட்டப்படும் கலை ஆற்றுகைக் கலையாகும். (2 புள்ளிகள்)

(ii)
- ✶ கணப் பிரசன்னமானது
- ✶ கூட்டுக்கலை
- ✶ கட்புல செவிப்புலக் கலை
- ✶ போலச் செய்யும் கலை
- ✶ மோதுகைகளைச் சித்தரிப்பது
- ✶ நால்வகைச் சித்தரிப்புக்களை கொண்டது
- ✶ நடிகர் - பார்ப்போர் - அரங்கு சங்கமிக்கும் கலை
- ✶ பார்ப்போர் நேரடித் தொடர்பு, எதிர்வினைத் தாக்கத்திற்குட்படுவது
- ✶ பிறக்கும் கணத்தில் இறந்து பார்ப்போர் மனங்களில் வாழ்வது
- ✶ அரங்கவெளியை மையமாகக் கொண்டது

(பொருத்தமான 4 பண்புகள் இருப்பின் 04 புள்ளிகள் அவற்றுள் இரண்டு பற்றி விளக்கியிருப்பின் 02 புள்ளிகள்) (6 புள்ளிகள்)

(iii)

| நாடகம் | சினிமா |
|---|---|
| வரையறுக்கப்பட்ட வெளி | வரையறுக்கப்படாத உண்மை வெளிகளில் |
| பார்ப்போரை மையமாகக் கொண்டது | கமறாவை மையமாகக் கொண்டது |
| பார்ப்போர் எதிர்வினை தாக்கம் செலுத்தும் | எதிர்வினை தாக்கத்திற்குட்பட்டது |
| உயிரோட்டமானது | விம்பமானது<br>படத்தொகுப்பு பிரதானம் (*Edditing*) |
| தொழினுட்ப பயன்பாடு குறைவு | தொழினுட்ப பயன்பாடு பிரதானம் |



agaram.lk
Scanned with CamScanner

| நாடகம் | வானொலி நாடகம் |
|---|---|
| அரங்கவெளியை மையமாகக் கொண்டது | கேட்போரின் மனமே அரங்கு |
| நால்வகைச் சித்திரிப்பு | வாய்மொழிச் சித்திரிப்பு |
| உயிரோட்டமானது | ஒலிப்பதிவானது |
| பார்ப்போர் | கேட்போர் / ரசிகர் |
| யாதாயினும் ஓர் வெளியில் நிகழ்த்தப்பெறுவது | கலையகத்தில் நிகழ்த்தப்பெறுவது |
| நடிகர், காட்சிவிதானிப்பு, வேடஉடை ஒப்பனை நேரில் பார்க்கலாம் | குரல் மூலமே உரையாடல் |
| கூடியளவு நடிகர் தேவை | குறைந்தளவு நடிகர் போதுமானது |

(மேலும் பொருத்தமான விடையிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்)

ஒப்பிட்டு விடையளிப்பது பிரதானம் (7 புள்ளிகள்)

02) (i)
* கதைப்பின்னல்
* பாத்திரம்
* சொல்லாடல்
* சிந்தனை (கரு)
* இசை (பாடல்)
* காட்சி (3 புள்ளிகள்)

(ii) கதைப்பின்னல்

ஒரு கதையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல். அது காரண காரிய தொடர்பைக் கொண்டிருக்கும். இது இரு வகைப்படும்

(1) சிக்கலானது

(2) எளிமையானது

கதைப்பின்னலின் பிரதான இரு அம்சங்களாவன :-

(1) எதிர்த்திருப்பம்

(2) தெளிவு

அரிஸ்ரோட்டில் கூறும் திறஜெடியின் பிரதான ஆக்கக்கூறு இதுவாகும்.

பாத்திரம்

நாடக கதையை வெளிப்படுத்தவது

நாடகச் செய்கைகள் மூலம் பாத்திரத் தன்மை வெளிப்படும்

திறஜெடி நாடகப் பாத்திரங்கள் தமது செயல்கள் மூலம் இரக்கம், பயம் ஆகிய உணர்வுகளைத் தோற்றுவித்து கதாஸிஸ் எனப்படும் உணர்ச்சி வெளிக்கொணர்கையை உண்டுபண்ண வேண்டும்.

சொல்லாடல்

பாத்திரங்களின் கருத்தை வெளிப்படுத்தும் பேச்சும் பாடலும் சொற்றிறன் / சொல்லாடல் எனப்படும் பாத்திர உணர்வு, நாடக மனநிலை, நாடகக் கதை என்பன வெளிப்பாடடையும்

கரு / சிந்தனை

காலமும் இடமும் பொருந்துமாறு நாடக சம்பவங்களைக் கூறும் திறன் சிந்தனையாகும். பாத்திர அசைவு, செயல், பேச்சு மூலம் இது வெளிப்படும்



agaram.lk
Scanned with CamScanner

இசை / பாடல்

கிரேக்க திறஜெடியில் பாடல் பிரதானம் இசையால் விளையும் இன்பம் அவல நாடகங்களில் விளையும் துணை இன்பங்களுட் சிறந்தது என்கிறார் அரிஸ்ரோட்டில் கோரஸ் பயன்பாடு

காட்சி

பார்ப்போர் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. நடிகரது செயல்களை வலியுறுத்தும் காட்சிப் பின்னணி நாடகச் சூழலைத் தோற்றுவிக்கும்.

(6 புள்ளிகள்)

(iii) காலம், இடம், செயல் / இயக்கம்

- ✶ நாடகக்கதை நிகழும் காலம் - காலம்
- ✶ நாடகக் கதை நிகழும் களம் - இடம்
- ✶ கதை நிகழ்ந்த போது நடைபெற்றவாறான நாடகச் செயல்கள் - செயல்

(மூன்றையும் கூறி விளக்கியிருப்பின் 03 புள்ளிகள்)

(எழுத்துருவினூடு உதாரணங்களுடன் விளக்கியிருப்பின் மேலும் 03 புள்ளிகள்)

03)

(i) வட்டக்களரி அரங்கு

- ✶ கூத்து ஆடப்படும் அரங்கு
- ✶ நிலமட்டத்திலிருந்து மண்ணால் 3 அடி உயர்த்தப்பட்ட விட்ட வடிவ மேடை
- ✶ 7 அல்லது 8 தடிகள் நடப்பட்டு உச்சி சேலைகளால் வாய்ந்த கூரை
- ✶ ஆடல் முதன்மை
- ✶ பாடலும் ஆடலும் இணைந்த வடிவம்
- ✶ பார்ப்போர் சுற்றிவர அமர்ந்திருப்பர்
- ✶ அண்ணாவியார் பிரதானம்
- ✶ சபையோர் காணப்படுவர்
- ✶ களரியை மையமாகக் கொண்ட ஆட்டக் கோலங்கள்
- ✶ பாத்திரம் திரை பிடித்து அழைத்து வரப்படல்
- ✶ பார்ப்போர் - நடிகர் ஊடாட்டம் அதிகம்
- ✶ ஆடல், பாடல், உடை ஒப்பனை அரங்க அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(ii) புறொசீனியம் வில்வளைவு அரங்கு

- ✶ 16ம் நூற்றாண்டில் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றியது
- ✶ படச்சட்ட அரங்கை ஒத்தது
- ✶ அரங்கில் முன்வளைவு காணப்படும்
- ✶ அரங்கின் பின்புறத்தில் ஓவியங்கள் காணப்படும்
- ✶ ஒருபக்கப் பார்ப்போரை கொண்டது

(iii) காமன் பொட்டல்

- ✶ கோயிலுக்கு அருகில் பொட்டல் வெளியில் ஆடப்படும்
- ✶ திரைச்சீலை, ஆடை அலங்காரம் இருக்காது
- ✶ காம தகனம்
- ✶ பார்ப்போர் ஊடாட்டம் அதிகம்

மேலும் பொருத்தமான விடையிருப்பின் புள்ளி வழங்கவும்

| | |
|---|---|
| ஒவ்வொரு வெளிக்கும் படம் வரைந்திருப்பின் | 1 புள்ளி |
| அரங்கமைப்பு பற்றி விளக்கியிருப்பின் | 1 புள்ளி |
| ஆற்றுகை முறைமை - | 02 புள்ளிகள் |
| ஆற்றுவோர் பார்ப்போர் தொடர்பு | 01 புள்ளி |

(3 × 5 = 15 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

## பிரிவு - B

04) (i) ஆங்கிகம், வார்ச்சிகம், ஸாத்விகம், ஆஹார்யம் (2 புள்ளிகள்)

(ii)

| லோகதர்மி | நாட்டியதர்மி |
|---|---|
| ✱ பாத்திர இயல்பான நடத்தை | ✱ இயல்பற்ற நடத்தை |
| ✱ போலித்தன்மை அற்றது | ✱ கற்பனை கலந்தது |
| ✱ உலக மக்களின் இருப்பை காட்டுவது | ✱ லலித அங்க அசைவு அபிநயம் கொண்டது |
| ✱ லலித அங்க அசைவு அற்றது | ✱ குறியீடுகள் |
| ✱ இயல்பான கதை உரையாடல், அபிநயம் கொண்டது | ✱ இயல்பற்ற நடிப்பு பாவங்கள், சொல்லாடல் கொண்டது |

(ஒவ்வொன்றுக்கும் மூன்று வீதம் கூறி விளக்கியிருப்பின் 06 புள்ளிகள்)

(iii) நடிகர் தமது மெய்ப்பாடுகள் மூலம் பார்ப்போருக்கு ஏற்படுத்தும் உணர்வே ரசம் ஆகும்.
ரஸ உருவாக்கத்திற்கு பாவங்கள் பிரதானம்
(விபாவ, அனுபாவ, வியபசாரி பாவம்)
பரதர் கூறும் 8 ரஸங்கள்

- சிருங்காரம்
- ஹாஸ்ய
- கருணா
- பயானக
- ரௌத்ர
- பீபத்ஸ
- அற்புத
- வீர

(மேலும் பொருத்தமான விடையிருப்பின் புள்ளி வழங்கவும்) (06 புள்ளிகள்)

agaram.lk

05)

(i) பேராசிரியர் எதிர்வீரச்சந்திரா

✱ பல்கலைக்கழக சிங்களப்பிரிவு பேராசிரியராக இருந்தவர்.

✱ ஜாதகக் கதைகள் தழுவிய நாடகம், வேற்றுமொழி நாடகம், நாட்டார் புராண கதை நாடகம் என பலவகை நாடகங்களைத் தயாரித்தவர்

✱ சுய ஆக்க நாடகங்களும் தயாரித்தவர்

✱ மனமே பபாவதி

✱ பாரம்பரிய அரங்கைத் தோற்றுவிக்க காரணமானவர்

(ii) சோமலதா சுபசிங்க

✱ சிங்கள நாடகாசிரியர்

✱ சிங்கள சிறுவர் அரங்கில் முக்கியமானவர்

✱ பல்வேறு உத்திகளை கையாண்டவர்

✱ மிக அண்மையில் காலமானவர்

(iii) ஜோண் டி சில்வா

✱ சிங்கள இசை நாடகமான நூர்த்தி வடிவத்துடன் தொடர்புடையவர்

✱ பழைய கதைகளை புதிய முறையில் நாடகமாக்கியவர்

✱ அடுத்த தலைமுறையினரை உருவாக்கியவர்

(பீற்றர் டி சில்வா)

(3 × 5 = 15 புள்ளி)



Scanned with CamScanner

(6)

(i) தமிழகத்தின் ஆடல் வடிவம்

- புராண இதிகாச கதை அடிப்படையாகக் கொண்ட கதை
- முழுச் சூழலும் அரங்க வெளியாகும்
- சடங்காகவும் அரங்காகவும் தொழிற்படும்
- கட்டியகாரன், திரை பயன்பாடு
- பெருஞ்காட்சிப் பண்பு

(ii) சிங்கள ரட்டயகும

- தென்மாகாணத்தில் பிரபல்யம் பெற்றது
- பெண்கள் தொடர்பான சடங்கு
- மலட்டுத்தன்மை நீங்கவும், கர்ப்பிணிப் பெண்களை பாதுகாக்கவும், சுகப் பிரசவம் வேண்டியும் நிகழ்த்தப்படும்
- ஏழு மலட்டு ராணிகளுடன் தொடர்புடையது
- ரித்தியாகய எனவும் அழைக்கப்படும்
- முதுமல்குமாரி சப்புமல்குமாரி போன்ற பாத்திரங்கள் இடம்பெறும்.

(iii) மகிடிக் கூத்து

- மந்திர தந்திர விளையாட்டுக்கள் நிறைந்தது
- மட்டக்களப்பில் சிறப்பாக நிகழ்த்தப்படுகிறது.
- 3 வகை மகிடிக் கூத்துக்கள்
- முதலிரண்டும் ஏட்டுப் பிரதி அற்றவை
- நீள் சதுர அரங்கில் நிகழ்த்தப்படும்
- ஒரு குழு இன்னொரு குழுவை மந்திர தந்திர விளையாட்டுக்களால் மயக்குதல் இடம்பெறும்.

(iv) பலே

- ஆடல் முதன்மை
- இத்தாலியில் ஆரம்பமானது
- பிரான்சிலும் மிகப் பிரபல்யம் பெற்றது
- பாடல் / இசைக்கேற்ப உடல் அசைவுகளுக்கூடாக உணர்ச்சி வெளிப்பாட்டுடன் ஆடப்படும்
- ஆங்கிக அபிநயம் பிரதானம்
- விரைவான ஆடல்
- உடலுடன் ஒட்டிய ஆடைகள்

(v) சொக்கரி

- சொக்கரி - அழகிய மாது எனப் பொருள்படும்
- பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது
- விவசாய செழிப்பு, சௌபாக்கியம் வேண்டி நிகழ்த்தப்படுவது
- லக்கலை, ஹங்குராங்கத்தை, தலாத்து ஓய பிரதேசங்களில்
- பாத்திரம் அறிமுகம் செய்பவர் - குருநான்சே
- அரங்கவெளி - களத்துமேடு
- கப்பல்கட்டுதல், நெல்குற்றதல், பாய் இழைத்தல் சித்திரிக்கப்படும்
- ஆண்கள் மட்டும் நடித்தல்
- சொக்கரி, பச்சிமீரா, பரியாரி
- கட்டபெர பயன்படும்.

(3 × 5 = 15 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner